# நாமக்கல் நகராட்சி
# நிர்வாக அறிக்கை 2016–2017

## 1. ஆட்சி எல்லை :



நாமக்கல் பேரூராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 12.01.1970–ம் தேதிய அரசாணை எண் : 54–ன்படி 17.01.1970–ம் நாள் முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக உயர்த்தப் பட்டது. பிறகு 07.02.1975–ம் தேதிய அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசு ஆணை எண்: 200–ன் படி 01.04.75 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 09.05.1983–ம் தேதிய 631 அரசாணையின்படி 09.05.1983 முதல் முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை அரசாணை எண் : 1074, நாள் : 14.12.1988–ன் படி இந்நகராட்சி தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் அரசு ஆணை எண். 22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் : 21.01.2011 வாயிலாக இந்நகராட்சி சுற்றியுள்ள 9 ஊராட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை NH 7 அமைந்துள்ளதாலும் மற்றும் நாமக்கல் நகர் நாமக்கல் மாவட்டத்தின் தலைநகரமாக இருப்பதாலும் சேலம் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், மதுரை மாவட்டம், ஈரோடு மாவட்டம் மற்றும் திருச்சி மாவட்டங்களுடன் தொடர்பு கொள்ளும் முக்கிய பேருந்து நெடுந்தடங்களையும் கொண்டுள்ளது. இந்நகரில் 75 மீட்டர் உயரத்தில் உள்ள பாறையின் மேல் திப்பு சுல்தான் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட சரித்திர முக்கியத்துவம் பெற்ற கோட்டையும், மசூதியும் உள்ளது. மேலும் கீர்த்தி வாய்ந்த 6.7 மீட்டர் உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலையுடன் கோவிலும், தேவி நாமகிரி அம்மன் கோவிலும், நரசிம்ம சுவாமி குகைக்கோவிலும் இந்நகருக்கு சிறப்பு சேர்க்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

வளர்ந்து வரும் இந்நகரில் அரசினரால் “ நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்” மகளிர் கலைக்கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. இப்பகுதியில் நிலவி வரும் தட்பவெட்ப சீதோஷ்ண நிலை இந்நகரிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் ஏராளமான கோழிப்



பெருக காரணமாக உள்ளது. அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இந்நகரம் “கோழிப்பண்ணை நகரம்” **(POULTRY TOWN)** என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் பார உந்துகளுக்கு பாடி கட்டும் தொழில் கூடங்கள் நிறைந்த இந்நகரம் தென்னிந்தியாவிலேயே இத்தொழிலில் சிறந்து விளங்குகிறது. அரசாணை எண். 260, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.10.2010இன்படி சின்ன முதலைப்பட்டி, முதலைப்பட்டி, கொசவம்பட்டி, கொண்டிசெட்டிபட்டி, பெரியப்பட்டி, காவேட்டிபட்டி, நல்லிபாளையம், அய்யம்பாளையம், தும்மங்குறிச்சி ஆகிய 9 ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டு 39 வார்டுகள் உள்ளடக்கி தற்போதைய பரப்பளவு 55.24 ச.கி.மீ. ஆகும்.

2). 2001–ம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சி மக்கள் தொகை 53055 ஆகும். இவற்றில் ஆண்கள் 26,881 பெண்கள் 26,174 ஆகும். 2011ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 1,19,194 ஆகும். இதில் ஆண்கள் 59813, பெண்கள் 59648 மற்றும் இதரர் 30 ஆகும். இவற்றில் பிற்படுத்தப்பட்டவர்கள் 21577 ஆகும். இதில் ஆண்கள் 10759, பெண்கள் 10818 ஆகும். மேலும், பழங்குடியினர் 533ம், இவற்றில் ஆண்கள் 263, பெண்கள் 270 ஆகும். 1901 முதல் மக்கள் கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை கீழ்கண்டவாறு இருந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1901 | 6843 | 1961 | 14972 |
| 1911 | 5196 | 1971 | 29983 |
| 1921 | 9293 | 1981 | 39782 |
| 1931 | 9306 | 1991 | 45038 |
| 1941 | 12515 | 2001 | 53055 |
| 1951 | 16830 | 2011 | 119194 |

25.10.2011 முதல் இந்நகராட்சியுடன் சேர்க்கப்பட்ட 9 ஊராட்சிகளின் மக்கள் தொகை சேர்த்து தற்போது இந்நகரின் மக்கள் தொகை 1,19,194 ஆகும்.

**5. இயங்கும் அலுவலர்கள் :**

| வ. எண். | அலுவலர்கள் பெயர் | பதவி | காலம் |
|---|---|---|---|
| 1. | திரு. ம. செந்தில் முருகன் | ஆணையாளர் | 01.04.2016–31.03.2017 |
| 2. | திரு. ந. கமலநாதன் | நகராட்சி பொறியாளர் | 01.04.2016–31.03.2017 |
| 3. | திரு. பா. ஜெயவேல் | நகரமைப்பு அலுவலர் | 01.04.2016–31.03.2017 |
| 4. | திரு. இரா. சண்முகவேல் | துப்புரவு அலுவலர் | 01.04.2016– 18.06.2016 |
| 5. | திரு. க. பேச்சிமுத்து | துப்புரவு ஆய்வாளர் (ம) துப்புரவு அலுவலர் (பொ) | 19.06.2016– 06.03.2017 |
| 6. | திரு. எம். பாலமுருகன் (10.05.2017 வரை) | துப்புரவு அலுவலர் | 07.06.2017– 31.03.2017 |
| 7. | திரு. அ.வ. சையத் முஸ்தபா கமால் | மேலாளர் | 01.04.2016– 18.09.2016 |
| 8. | திரு. மு. கோவிந்தராஜன் | கணக்கர் | 01.04.2017 –31.03.2017 |
| | | கணக்கர் (ம) மேலாளர் (பொ) | 19.09.2016– 26.03.2017 |
| 9. | திரு. சொ. ஆறுமுகம் | மேலாளர் | 27.03.2017 – 31.03.2017 |

ஆணையாளர் தலைமையில் இந்நகராட்சி அலுவலகம் இயங்கி வருகிறது. கீழ்க்குறிப்பிட்டுள்ள பிரிவுகள் செயல்பட்டு வருகிறது.

1. பொது அலுவலக பிரிவு
2. வருவாய் பிரிவு
3. பொறியியல் பிரிவு
4. பொது சுகாதாரப் பிரிவு
5. நகரமைப்பு பிரிவு

மேற்குறிப்பிட்ட பிரிவுகள் இயங்குவதற்கு அறிக்கையாண்டில் நிர்வாக செலவாக ரூ. /– செலவிடப்பட்டது. நியமனங்கள் மற்றும் தண்டனைகள் விதிப்படி கையாளப்பட்டது.

**அறிக்கையாண்டில் ஓய்வு பெற்ற பணியாளர்கள்**

1. திருமதி. ரேணுகாதேவி (இளநிலை உதவயாளர்) – 30.06.2016
2. திருமதி. பார்வதி / பழனி (துப்புரவு பணியாளர்) – 30.06.2016
3. திருமதி. மாரம்மாள்/ முத்தாபோயன் (துப்புரவு பணியாளர்) – 30.06.2016
4. திரு. சாமிநாதன் / நல்லான் (துப்புரவு பணியாளர்) – 30.06.2016

**அறிக்கையாண்டில் காலஞ்சென்ற பணியாளர்**

1. திரு. எம். செந்தில்குமார் (ஓட்டுநர்) – 25.05.2016
2. திரு. இரா. இரவிச்சந்திரன் (மீட்டர் ரீடர்) – 21.11.2016

**அறிக்கையாண்டில் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்க**

– ஒருவரும் இல்லை –

**அறிக்கையாண்டில் பதவி உயர்வு பெற்ற பணியாளர்**

1. திரு. பெ. தியாகராஜன், இளநிலை உதவியாளர் – 18.08.2016

**அறிக்கையாண்டில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள்**

– ஒருவரும் இல்லை –

**பொது அலுவலகப் பிரிவில் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்தவர்கள் விவரம் :**

| வ. எண். | அலுவலர்கள் பெயர் திருவாளர்கள்/திருமதி / செல்வி | பிரிவு | பணிப் பொறுப்பு | காலம் |
|---|---|---|---|---|
| 1. | வ.செ. பிரகாஷ், உதவியாளர் | என்1 | தேர்தல் , சத்துணவு, நியமனபிரிவு | 01.04.2016 – 31.03.2017 |
| | | அ3 | சேமநலநிதி, ஓய்வூதியம் | 16.11.2016 – 31.03.2017 |
| 2. | வெ. ரேணுகாதேவி, இ.நி.உ. | அ3 | சேமநலநிதி, ஓய்வூதியம் | 01.04.2015 – 30.06.2016 |
| 3. | கோ.தனலட்சுமி, வ.உ. | என்1 | தேர்தல் | 01.04.2016–30.06.2016 |
| | | அ3 | சேமநலநிதி, ஓய்வூதியம் | 01.07.2016–28.07.2016 |
| | | என்1 | தேர்தல் | 29.07.2016– 31.03.2017 |
| 4. | சி.தீபா, வ.உ | அ3 | சேமநலநிதி, ஓய்வூதியம் | 29.07.2016–15.11.2016 |
| | | அ1 | – | 16.11.2016–31.03.2017 |
| 5. | மு.நந்தகுமார், ஊ.செ. | அ1 | – | 01.04.2016–10.04.2016 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | மா. மோகன்சந்திரன், இ.நி.உ. | எப் 1 | | 01.04.2016–23.09.2016 |
| 7. | டி.கவிதா | எப் 1 | | 24.09.2016–31.03.2017 |
| | | அ1 | | 11.04.2016–15.11.2016 |
| | | பி3 | பல்வகை, தணிக்கை, FBF, ஈமச்சடங்கு, | 19.08.2016–31.03.2017 |
| 8. | பெ. தியாகராஜன், இ.நி.உ. | பி3 | பல்வகை, தணிக்கை, FBF, ஈமச்சடங்கு, | 01.04.2015 – 18.08.2016 |
| 9. | வீ.பா. ரேவதி,வ.ஆ | அ2 | – | 01.04.2016–23.08.2016 |
| 10 | பெ. முருகேசன், வ.ஆ. | அ2 | – | 24.08.2016–31.03.2017 |
| 11. | கா. பத்மாவதி, இ.நி.உ. | பி2 | காசாளர், எழுது பொருள் பராமரிப்பு | 01.04.2015 – 31.03.2016 |
| 12. | செ. பிரசாத், இ.நி.உ. | இ1 | அ2, இ1, பொறியியல் | 01.04.2016–31.03.2017 |
| | | | இ2 | 01.04.2016–15.02.2017 |
| | | | அ2 | 23.08.2016–31.03.2017 |
| 13. | மு. மணிவண்ணன், இ.நி.உ | இ2 | இ2 | 16.02.2017–31.03.2017 |
| 14. | ஆர். சரண்யா, இ.நி.உ. | ஹச்1 | பொது சுகாதாரப் பணிகள் | 01.04.2016–31.03.2017 |
| 15 | ப. நித்யா, இ.நி.உ. | சி1 | அனைத்துபணி பணிக்குழு | 01.04.2016–31.03.2017 |
| 16. | பெ. மணிமேகலை, தட்டச்சர் | டி1 | தட்டச்சுப் பணி | 01.04.2016–31.03.2017 |
| | | | தட்டச்சுப் பணியுடன் தகவலறியும் உரிமை சட்டம் | 01.04.2016–31.03.2017 |
| 17. | வ. லதா, ப.எ. | டி2, பி1 | தபால் பட்டுவாடா, பதிவறை, வைப்பு தொகை (கூ.பொ) | 01.04.2016–31.03.2017 |
| | | | திருமணமண்டபம் ஒதுக்கீடு பணி | 01.04.2016–31.03.2017 |

## <u>கணினி மயமாக்கல் :</u>



இவ்வலுவலக கணினிப்பிரிவில் 32 கணினிகள் 10 லேசர் பிரிண்டர்கள், 5 டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் மற்றும் 5 UPS பயன்பாட்டில் உள்ளன.

01.07.2000 முதல் நகராட்சியால் பதியப்படும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்த குழந்தைகளின் விபரங்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு சான்றிதழ்களும் கணினி மூலம் பிரிண்ட் செய்யப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

01.04.2000 முதல் சொத்துவரி மற்றும் தொழில்வரி, குடிநீர் கட்டணம் மென்பொருள் நிறுவப்பட்டு அனைத்து விபரங்களும் கணினியில் பதியப்பட்டு வருகிறது. 31.05.2003 முதல் சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் கணினி சேவை மையம் மூலம் வசூல் செய்யப்பட்டு கணினி வாயிலாக அச்சிட்ட ஒப்புதல் சீட்டுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் 09.07.2004 முதல் முற்றிலுமாக வரித்தண்டலர்களால் வசூலிப்பது நிறுத்தப்பட்டு கணினி வாயிலாக மட்டும் குடிநீர் மற்றும் சொத்துவரியும் 02.09.2004 முதல் தொழில் வரியும் 07.09.2004 முதல் குத்தகை இனங்களும் 02.08.2004 முதல் பல்வகைக் கேட்புகளும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

01.04.2000 முதல் நகராட்சியின் வரவு செலவு கணக்குகள் (இரட்டைப் பதிவு முறையில்) அனைத்தும் பதியப்பட்டு மாதாந்திர வரவு செலவு குறிப்பு பிரிண்ட் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வலுவலக கணினி இண்டர்நெட் இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டு மின் அஞ்சல் வசதியுடன் commr.namakkal@tn.gov.in இயங்கி வருகிறது. மின் அஞ்சல் மூலம் தபால்கள் உடனுக்குடன் பெறப்பட்டும் அதற்குண்டான பதில்களை மின் அஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பப்பட்டும் வருகிறது. கணினி வாயிலாக வரி வசூல் மையங்கள் 1. தாய்சேய்நல விடுதி, கோட்டையிலும், 2. பழைய நகராட்சி அலுவலகம், மோகனூர் சாலை மற்றும் 3. நல்லிபாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திலும் வரி வசூல் மையம் செயல்பட்டு வருகிறது.

மேலும், அரசு மருத்துவமனையில் தினமும் பிறப்புகளை பதிவு செய்து உடனடியாக இலவச சான்றிதழ் வழங்க ஏதுவாக 27.02.2012 முதல் கணினி பிறப்பு சான்றிதழ் பதிவு மையம் செயல்பட்டு வருகிறது.

பொதுமக்கள் இலவசமாக இணைய தளம் மூலம் பிறப்பு இறப்பு சான்று **http://municipality.tn.gov.in.namakkal** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் அவரவர் தம் வரி நிலுவைகள் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவு விபரங்களையும், அவர்களாகவே தெரிந்து கொள்ள ஏதுவாக தொடு திரை (Touch Screen) நகராட்சி கணினி சேவை மையத்தில் இயங்கி வருகிறது.

**இ) அச்சடித்தல் :—**

அறிக்கையாண்டில் நகராட்சிக்கு தேவையான படிவங்கள், புத்தகங்கள் முதலியவற்றை கூட்டுறவு அச்சகங்களில் தேவைக்கேற்ப அவ்வப்போது அச்சிடப்பட்டு வாங்கப்பட்டுள்ளது. அதற்கான செலவு ரூ. 10,50,658/— ஆகும். இதற்கு சென்ற ஆண்டில் ரூ. 12,97,991/— செலவிடப்பட்டது.

# பொறியியல் பிரிவு

## 1. அலுவலர்கள் :

இந்நகராட்சியில் 2–ம் நிலை பொறியாளர் பணியிடம் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் 05.05.88–ம் தேதிய ப.மு.எண் : 37419/87/எம்3–ன்படி தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டிற்கு இப்பணியிடத்திற்கு தொடந்து நிரந்தரமாக அனுமதி கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

**பொறியியல் பிரிவில் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்தவர்கள் விவரம் :**

| வ. எண். | அலுவலர்கள் பெயர் திருவாளர்கள் | பதவி | பணிப் பொறுப்பு | காலம் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ந. கமலநாதன் | நகராட்சி பொறியாளர் | | 01.04.2016–31.03.2017 |
| 2. | அ. குணசீலன் | உ.பொ. | பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு (மேற்கு) | 01.04.2016–31.03.2017 |
| 3. | க. கார்த்திக் | உ.பொ | பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு (கிழக்கு) | 01.04.2016–31.03.2017 |
| 4. | எம்.ஆர். ரவி | ப.பா. | பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு (மேற்கு) | 01.04.2016–31.03.2017 |
| 5. | தா. ஜெயப்பிரகாஷ் நாராயணன் | ப.பா. | பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு (கிழக்கு) | 01.04.2016–31.03.2017 |
| 6. | ஜி. ராஜேந்திரன் | மி.ப.–1 | குடிநீர் பிரிவு | 01.04.2016–31.03.2017 |
| | பி. சரவணன் | கு.பொ. | குடிநீர் பிரிவு | 01.04.2016–31.03.2017 |
| | ந. தினகரன் | வயர்மேன் | தெருவிளக்கு குடிநீர் விநியோகம் மேற்கு பகுதி | 01.04.2016–31.03.2017 |
| | ஆர். பழனிசாமி | வயர்மேன் | தெருவிளக்கு குடிநீர் விநியோகம் கிழக்கு பகுதி | 01.04.2016–31.03.2017 |
| | பி. பாஸ்கர் | ஓட்டுநர் | TN 88 - 8282 (Jeep) | 01.04.2016–31.03.2017 |
| | ஜி. கருணாநிதி | ஓட்டுநர் | TN 28 AF - 555 (Jeep) | 01.04.2016–31.03.2017 |
| | எஸ். முருகேசன் | ஓட்டுநர் | TN 28 AA 6635 (குடிநீர் லாரி) TN 88 3804 | 01.04.2016–31.03.2017 |
| | எம். செந்தில்குமார் | ஓட்டுநர் | TN 28 E 9582 (குடிநீர் லாரி) | 01.04.2016–22.05.2016 |

| | | | | |
|---|---|---|---|---|
| | டி. சரவணன் | ஓட்டுநர் | TN 88 3807 (குடிநீர் லாரி) | 01.04.2016–31.03.2017 |
| | | | TN 28 AM 9340 & TN 28 AM 9342 Desilting Auto | |

## 2. பாலங்கள், சாலைகள் :



இந்நகராட்சியிலிருந்து முறையே சேலம், கரூர், திருச்சி மாவட்டங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளது. இச்சாலைகள் தேசிய நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலை எண் : 7 இந்நகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது.

## 3. சாலைகள் :



இந்நகராட்சி வழியாக செல்லும் நெடுஞ்சாலைகள் மொத்த நீளம் 15.865 கிலோ மீட்டராகும். அவை நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் எல்லைக்குள் கீழ்க்கண்ட நெடுஞ்சாலைகள் செல்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சேந்தமங்கலம் சாலை | 1.300 | கி.மீ. |
| 2. | திருச்சி சாலை | 1.240 | கி.மீ. |
| 3 | காஷ்மீர் கன்னியாகுமரி சாலை | 6.240 | கி.மீ. |
| 4 | துறையூர் சாலை | 0.770 | கி.மீ. |
| 5 | மோகனூர் சாலை | 1.200 | கி.மீ. |
| 6 | திருச்செங்கோடு சாலை | 2.100 | கி.மீ. |
| 7 | நைனாமலை சாலை | 1.225 | கி.மீ. |
| 8 | ராசிபுரம் சாலை | 1.790 | கி.மீ. |
| | மொத்தம் | 15.865. | கி.மீ. |

அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்ட சாலைகள் கீழ்க்குறிப்பிட்டுள்ளபடி 60.038 கிலோ மீட்டராகும்

| வ. எண் | சாலையின் இனம் | மொத்த நீளம் | |
|---|---|---|---|
| 1 | தார் சாலை | 165.14 | கி.மீ. |
| 2 | சிமெண்ட் கான்கிரீட் சாலை | 61.25 | கி.மீ. |
| 3. | கற்சாலை | 18.21 | கி.மீ. |
| 4. | மண்சாலை | 169.75 | கி.மீ. |
| | **மொத்தம்** | **414.35** | **கி.மீ.** |

எல்லா சாலைகளும் திருப்திகரமான முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. கட்டிடங்கள், சாலைகள், சாக்கடைகள் ஆகியவற்றை நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி இளம் பொறியாளர்களும், பொதுப்பணி பணிப்பார்வையாளர்களும் கண்காணித்து வந்தனர். சாலைகள் பராமரிப்பில் இந்த ஆண்டில் ரூ. **9.70** கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள் பராமரிப்பதற்கான நல்ல தரமான சரளை கற்கள் உபயோகிக்கப்பட்டது. நகராட்சிக்கு சொந்தமான கல்குவாரிகள் எதுவும் இல்லை. அறிக்கை ஆண்டில் வண்டி வாகனாதிகள் வரி மூலம் வருமானம் இல்லை.

## 4. தங்கும் விடுதிகள் :



நகராட்சிக்கு சொந்தமான தங்கும் விடுதிகள் இல்லை. நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையினரால் ஒரு சிறந்த தங்கும் விடுதி ஐந்து அறைகளுடன் போதிய வசதிகளுடன் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 5. தெரு விளக்கு வசதிகள் :



அறிக்கையாண்டில் **5934** தெரு மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டது. இவற்றுள் **4438** குழல் விளக்குகள் **566** சோடியம் ஆவி விளக்குகள் **162** மெர்க்குரி ஆவி விளக்குகள், **724** சிக்கன மின் விளக்குகள், உயர்மின் கோபுரத்தில் **33** விளக்குகள், சோலார் விளக்குகள் **8** அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

தெரு விளக்குகளின் பராமரிப்பு பணி கடந்த செப்டம்பர் **1989** முதல் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. **2008–2009**ஆம் ஆண்டு முதல் தெரு விளக்கு

பராமரிப்பு பணிகளள் தனியார் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தெரு விளக்கு பராமரிப்பு பணிக்காக இரண்டு மின்கம்பியாளர்களும் இரண்டு மின்கம்பி உதவியாளர்களும் உள்ளனர். அறிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக ரூ. 60.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தனியார் மூலம் கடந்த ஆண்டில் தெருவிளக்கு பணிகள் ரூ. 46.43 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டது.

## 6. பொறிகளும் கருவிகளும் :



சாலை வேலைக்கென ஒரு சாலை உருளை 17.08.79–ம் தேதிய 1280 எண்ணுள்ள அரசு (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை) உத்திரவின்படி ரூ. 2,04,800/– செலவில் வாங்கப்பட்டது. தற்போது மேற்படி வாகனம் முழுவதுமாக பழுதடைந்து கழிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7. துவக்கக் கல்வி :



01.04.90 முதல் நகராட்சி பள்ளிகள் அனைத்தும் அரசின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. 5 நகராட்சி பள்ளிகளில் 4 பள்ளிகள் நகராட்சிக் கட்டிடங்களிலும் ஒரு பள்ளி தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையிலும் இயங்கி வருகின்றன.

## அ. உயர்நிலைப் பள்ளிக் கல்வி :



இந்நகராட்சி எல்லைக்குள் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியும், 3 அரசினர் மேல்நிலைப் பள்ளிகளும், 7 தனியார் பள்ளிகளும் உள்ளன. அவைகளாவன :

1. அரசு உயர்நிலைப் பள்ளி.
2. அரசினர் மேல்நிலைப்பள்ளி ( வடக்கு ).

3. அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ( தெற்கு ).
4. அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி.
5. கொங்கு மெட்ரிகுலேசன் பள்ளி
6. ஜேக் & ஜில் மெட்ரிகுலேசன் பள்ளி
7. கந்தசாமி கண்டர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி
8. இளங்கோ மெட்ரிகுலேசன் பள்ளி
9. எஸ்.பி.எம். உயர்நிலைப் பள்ளி மற்றும் எஸ்.பி.எம். துவக்கப்பள்ளி,
10. ஆர்.சி. நடுநிலைப்பள்ளி
11. அர்த்தநாரி துவக்கப்பள்ளி
12. நம்மாழ்வார் நடுநிலைப்பள்ளி
13. சரஸ்வதி துவக்கப்பள்ளி
14. வாசவி துவக்கப்பள்ளி
15. இராஜாஜி துவக்கப்பள்ளி

மேலும் நகராட்சி எல்லைக்குள் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரியும், மாவட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் இயங்கி வருகிறது. நகராட்சி எல்லைக்கு அருகாமையில் ஒரு அரசு ஆண்கள் கலைக் கல்லூரியும், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் இயங்கி வருகிறது.

## ஆ. தனிப் பள்ளிகள், பொது நூல் நிலையங்கள் :

இந்நகராட்சியில் தனிப்பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை, பொது நூல் நிலையம் மூலம் லோக்கல் லைப்ரரி அத்தாரிட்டி அவர்களால் பராமரிக்கப்படுவதால் நகராட்சியில் தனியாக நூல் நிலையம் பராமரிக்கப்படவில்லை. ஆனால் பொது மக்களின் தேவைக்காக நான்கு பொது வாசக சாலைகள் கீழ்க்கண்ட இடங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு அறிக்கை நாளேடுகளுக்காக அறிக்கை ஆண்டிலும் 2014–2015ஆம் ஆண்டிலும் செலவு செய்யப்படவில்லை.

1. இராமாபுரம் புதூர்
2. நடராஜபுரம்

## 1. குடிநீர் விநியோகம் :



இந்நகராட்சி 39 வார்டுகளை கொண்ட தேர்வு நிலை நகராட்சியாக 1988ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. நகராட்சியின் மொத்த பரப்பளவு 55.24 சதுர கி.மீ. மற்றும் மக்கள் தொகை 2011இன்படி 119491 ஆகும். இந்நகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரம் காவேரி ஆறு ஆகும். தற்போது மூன்று குடிநீர் திட்டங்கள் மூலமாக காவேரி ஆற்றில் மோகனூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் உறிஞ்சப்பட்டு, அணியாபுரம் நீர் உந்து நிலையம் வழியாக நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சுமார் 8.30 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இது தவிர இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் இணைத்து கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 2.00 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் உள்ள மின்விசை பம்புடன் 197 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் மற்றும் கைபம்புகள் மூலமாக 1.58 MLD குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. ஆக மொத்தம் 11.88 MLD வீதம் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 98 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும், இந்நகராட்சிக்கு உட்பட்ட குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு இந்நகராட்சிக்கு சொந்தமான இரண்டு குடிநீர் லாரிகள் மூலமாக 1.50 இலட்சம் லிட்டர் குடிநீர் அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு ஏற்றப்பட்டு, பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது, இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்ட 9 ஊராட்சி பகுதிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நகராட்சிக்கு ரூ. 191.40 கோடி மதிப்பீட்டில் ஜேடர்பாளையத்தில் இருந்து எடுத்து வர புதிய குடிநீர் அபிவிருத்தி தட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட, திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை கோவை மேற்கு மண்டல தொழில்நுட்ப குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை அலுவலகத்தின் ஒப்புதல் பெற்று, நிதி ஆதாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகரில் 68 பொதுக் குடிநீர் குழாய்களும், 34 திறந்தவெளி கிணறுகளும் 197 கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும், 73 மோட்டார் பொருத்திய ஆழ்துளை கிணறுகளும் மற்றும் 181 மினிபவர்பம்ப் பொருத்திய ஆழ்துளை கிணறுகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது நகரில் **22038** குடிநீர் இணைப்புகள் உள்ளன. இவற்றுள் 20849 வீட்டு உபயோக இணைப்புகள், 1189 வீட்டு உபயோகமில்லாத இணைப்புகளாகும். மீட்டர் ரேட் இணைப்புகளில் வீட்டு உபயோக இணைப்பிற்கு 1000 லிட்டருக்கு ரூ. 6/– வீதம் குறைந்தபட்சம் ரூ. 76/– மாதக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. வீட்டு உபயோகமில்லாத குடிநீர் இணைப்புகளுக்கு 1000 லிட்டருக்கு ரூ.15/– வீதம் குறைந்தபட்சம் ரூ.154/– மாதக்கட்டணம் ஆக நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 01.07.2005–ம் தேதி முதல் டேப்ரேட் வகை கட்டண இணைப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 60/– வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. வீட்டு இணைப்புகளுக்கு ரூ. 64/– ஆகும். இந்த அறிக்கையாண்டில் மீட்டர்கள் பராமரிப்பு செலவு சேர்க்கப்படவில்லை.

## <u>குடிநீர் புனரமைப்புத் திட்டப் பணி :</u>

நாமக்கல் நகராட்சி IUDM – 2013–2014இன்கீழ் நகராட்சி குடிநீர் புனரமைப்பு பணிகளுக்கு ரூ. 3.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான பெரியபட்டி, காவேட்டிபட்டி, உத்தமபாளையம், முதலைபட்டி, சின்ன முதலைபட்டி பகுதிகளில் 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி அமைத்து, மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் பம்பிங் செய்ய ரூ. 50.00 லட்சம் மதிப்பீட்டில் 5 தரைமட்ட தொட்டிகள் கட்டும் பணிகள், மோகனூர் தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள மூன்றாவது குடிநீர் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட 60 குதிரை விசை கொண்ட மோட்டார் பம்புகளாக மாற்றம் அணியாபுரம் நீருந்து நிலையத்தில் மூன்றாவது குடிநீர் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட 45 குதிரை விசை கொண்ட மோட்டார் பம்பு 60 குதிரை விசை கொண்ட மோட்டார் பம்புகளாக மாற்றம் செய்யும் பணிகள் மற்றும் நகர பகுதிகளில் உள்ள குடிநீர் அளவினை கண்காணிக்க SCADA Telemetry பொருத்தும் பணி ஆகிய அனைத்தும் முடிவு பெற்று செயல்பாட்டில் உள்ளது.

## கூடுதல் காப்புத் தொகை :

நகரில் இதுவரை வழங்கப்பட்டுள்ள குடிநீர் வீட்டு இணைப்புகளுக்கு கூடுதல் காப்புத் தொகை கீழ்க்கண்டுள்ளவாறு வசூலிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வீட்டு உபயோகத்திற்கான இணைப்பு காப்பு தொகை | ரூ. 3000/– |
| 2 | வீட்டு உபயோகமில்லாத தொழிற்சாலை சம்பந்தமான இணைப்பு காப்புத் தொகை | ரூ. 5000/– |
| 3. | வீட்டு உபயோகமில்லாத தொழிற்காலை சம்பந்தமான இணைப்பு காப்புத் தொகை | ரூ. 10,000/– |

புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்தும் போது குடிநீர் இணைப்புகளுக்கு கூடுதல் காப்புத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வசூலிக்க நகர்மன்ற தீர்மானம் எண். 293, நாள் 10.11.2004–ல் மன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | வீட்டு உபயோகத்திற்கான இணைப்பு காப்பு தொகை | ரூ. 3000/– |
| 2. | வீட்டு உபயோகமில்லாத இணைப்புகளுக்கு | ரூ. 5000/– |

கூடுதல் காப்புத் தொகை பெற அறிவிப்புகள் அனுப்பி வசூலிக்கப்பட்டு வருகிறது.

## நகராட்சி நிதிப் பணிகள – 2016–2017 :

2016–2017ஆம் நிதியாண்டில் பொது நிதியில் 72 பணிகள் ரூ. 238.00 இலட்சம் மதிப்பீட்டிலும், குடிநீர் நிதியில் 112 பணிகள் ரூ. 212.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது.

## 2016–2017ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் :

### 1. சிறப்பு சாலைகள திட்டம் 2016–2017 :

நாமக்கல் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலை மேம்பாடு பணிகள் ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 27.08.2015ஆம் தேதிய செயல்முறைகள் வாயிலாக கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | பணிகள் எண்ணிக்கை | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | சிப்பம் Iஇன்கீழ் தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி. | 200 | 15 |
| 2. | சிப்பம் IIஇன்கீழ் தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி. | 200 | 15 |
| 3. | சிப்பம் IIIஇன்கீழ் தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி. | 200 | 11 |
| 4. | சிப்பம் IVஇன்கீழ் தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி. | 200 | 17 |
| **மொத்தம்** | | **800** | **58** |

மேற்கண்ட பணிகளில் தற்போது அனைத்து பணிகளும் பணி முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–2017 :

நாமக்கல் நகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2016–2017இன்கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 28.06.2016இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணி விவரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரில் உள்ள சாலையில் 12 M. LED High Mask Light பொருத்தும் பணி. | 9.00 |
| 2. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரில் உள்ள சாலையில் 20 M. LED High Mask Light பொருத்தும் பணி. | 16.00 |
| **மொத்தம்** | | **25.00** |

## 3. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–2017 :

நாமக்கல் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2016–2017இன்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 20.01.2016 மற்றும் 06.09.2016இல் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் அனைத்தும் முடிவுற்றது.

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | வார்டு எண். 11, எம்.ஜி.ஆர். நகர் அங்கன்வாடியில் சமையலறை மற்றும் கழிப்பிடம் அமைத்தல் | 4.00 |
| 2. | வார்டு எண். 17, அண்ணா நகர் பகுதியில் மழைநிர் வடிகால் அமைக்கும் பணி | 0.50 |
| 3. | பூங்கா சாலை பகுதியில் கோட்டை சாலை மற்றும் உழவர் சந்தை சந்திப்பில் சாலையை விஸ்தரிப்பு செய்யும் பொருட்டு சுற்றுசுவர் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 9.30 |
| 4. | பூங்கா சாலை கிழக்கு பகுதியில் சுற்று சுவர் அமைத்தல் | 7.00 |
| 5. | காவேட்டிபட்டி பஸ் நிறுத்தம் அமைத்தல் | 4.00 |
| | **மொத்தம்** | **24.80** |

## 4. அம்மா உணவகங்கள் :

தற்போது இரண்டு அம்மா உணவகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு அன்றாடம் காலை இட்லி ஒன்றுக்கு ரூ. 1.00 வீதம் மற்றும் மதியம் சாம்பார் சாதம் ரூ. 5.00 வீதம், தயிர் சாதம் ரூ. 3.00 வீதம் என்ற விலையில் உணவு வழங்கப்படுகிறது.

## 5. இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைநிரப்பும் நிதி 2016–2017 :

இயக்கம் மற்றும் பராமரிப்பு இடை நிரப்பும் நிதி 2014–15இன்கீழ் இந்நகராட்சியில் ரூ. 450.00 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நடப்பு ஆண்டில் பணி முடிவுற்றுள்ளது.

## சொர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் திருமதி. கே. மஞ்சுளா மற்றும் திருமதி. சி. பாரதி ஆகியோர் சமுதாய அமைப்பாளர்களாக 01.04.2016 முதல் 25.05.2016 வரை பணிபுரிந்தனர். பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 24.05.2016ஆம் தேதியை ந.க. எண். 1882/2014/UPA-3இன்படி மகளிர் திட்ட அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

- இத்திட்டத்தின்கீழ் 85 மகளிர் சுயஉதவி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.
- IHSDP ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 440 பயனாளிகளுக்கு 316.80 லட்சத்தில் வீடுகட்டி கொள்ள அனுமதி வழங்கப்பட்டு, 440 பயனாளிகளும் வீடு கட்டி முடித்துள்ளனர். இதன்படி திட்டம் முடிக்கப்பட்டு மத்திய அரசுக்கு திட்ட முடிவறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## NULM திட்டத்தின்கீழ் 2016–2017ஆம் நிதியாண்டிற்கு கீழ்க்கண்டவாறு மான்யம் இருப்பு உள்ளது :

| வ. எண். | ஒதுக்கீடு விவரம் ரூ. இலட்சத்தில் | | செலவு தொகை ரூ. | |
|---|---|---|---|---|
| 1. | SMID | 8.88 | 3.10 | 5.78 |
| 2. | SE | 24.02 | 0 | 24.02 |
| 3. | CBT | 2.11 | 1.23 | 0.88 |
| 4. | SUH | 0.36 | 0.36 | 0 |
| 5. | SUSV | 6.10 | 0.82 | 5.28 |
| 6. | AOE | 0 | 0 | 0 |
| 7. | IEC | 3.16 | 0.24 | 2.92 |
| மொத்தம் | | 44.63 | 5.75 | 38.88 |

## வீட்டு வசதிகளும் இதர வசதிகளும் :



பொது சுகாதார துப்புரவு பணியாளர்களுக்கு இலவசமாக ஆண்டுதோறும் 2 செட் சீருடை, தொப்பி, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் 1 ஜோடி காலணிகளும், மழைக் கோட்டும் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல் நடப்பு ஆண்டிலும் கொடுக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் இதற்கென ரூ. 2,35,600/- செலவு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் இது ரூ. 2,40,878/– ஆகும்.

## பொது நலமும் தீ பாதுகாப்பும் :



இந்நகரில் தீயணைப்பு நிலையம் 29.09.75 முதல் அரசினரால் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலகம், நகராட்சி பள்ளி, அணியாபுரம் மற்றும் மோகனூர் இயந்திர நிலையங்களில் தீ தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது. குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டு தூய்மையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

# வரி மற்றும் வரியில்லா இனங்கள் – 2016–2017

**வருவாய் பிரிவில் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்தவர்கள் விவரம் :**

| வ. எண். | அலுவலர்கள் பெயர் திருவாளர்கள் / திருமதி / செல்வி | பிரிவு | பணிப் பொறுப்பு வார்டுகள் | காலம் |
|---|---|---|---|---|
| 1. | வீ.பா. ரேவதி | வ.ஆ. | - | 01.04.2016– 23.08.2016 |
| 2. | பி.முருகேசன் | வ.ஆ. | - | 24.08.2016–31.03.2017 |
| 3. | க. பழனிசாமி | வ.உ. | 5, 15 | |
| 6. | க. ஆனந்தராஜன் | வ.உ. | 26, 29, 35, 36 | |
| 7. | கோ. மோகன்ராஜ் | வ.உ. | 9, 10, 21, 20, | |
| 8. | வி. மகாதேவன் | வ.உ. | 11, 13, 14 , | |
| 9. | கே. தனலட்சுமி | வ.உ. | - | |
| 10. | சி. தீபா | வ.உ. | 22, 25, 24 | 01.04.2016–28.07.2016 |
| | மு. நந்தகுமார் | ஊ.செ. | 22, 25, 24 | 29.07.2016–31.03.2017 |
| | | | தொழில்வரி | 11.04.2016–28.07.2016 |
| 11. | சி. குப்புசாமி | ஊ.செ. | 2, 16, 19 | |
| 12. | மு. வரதராசு | ஊ.செ. | 3, 4 | |
| 13. | சி. மணிமன்னன் | ஊ.செ. | 1, 6 | |
| | | | 8, 30, 31, 34 மற்றும் திருச்சி சாலை அம்மா உணவகம் | |
| 14. | ச. செல்வராஜ் | ஊ.செ. | 7, 17, 37 | |
| 15. | ப. மதுரைவீரன் | ஊ.செ. | 18, 27, 28 | |
| | | | மற்றும் பூங்கா சாலை அம்மா உணவகம் | |
| 16. | சி. குழந்தை வடிவேல் | ஊ.செ. | 38,39 | |
| 17. | கு. குணசேகரன் | ஊ.செ. | 12, 23, 32, 33 | |

**<u>சந்தைகள், பேருந்து நிலையம், ஆடு அடிக்கும் தொட்டி, இறைச்சி கடைகள் முதலியவை :</u>**

| வ.எண் | விபரம் | வருமானம் | | |
|---|---|---|---|---|
| | | 2014–15 | 2015–16 | 2016–17 |
| 1 | வார சந்தை **& தினசரி சந்தை** | 1812195 | 3270000 | 3433500 |
| 2 | தினசரி சந்தை | 1728857 | – | – |
| 3 | பேருந்து நிலையம் வசூல் | 1757116 | 1761396 | 1918512 |
| 4 | ஆடு அடிக்கும் தொட்டி மாமிசக் கடைகள் | 77726 | 135000 | 141780 |
| 5 | கடைகள் மற்றும் இதர இனங்கள் | 8097755 | 8292766 | 8372560 |
| 6 | மிதிவண்டிகள் | 1586390 | 1467560 | 1540938 |
| 7 | நவீன கட்டண கழிப்பிடங்கள்–4 | 1346996 | 1637852 | 1719745 |
| 8 | தொலைக்காட்சி மற்றும் ஒலிபெருக்கி விளம்பரம் | 79380 | 87000 | 91350 |
| 9 | தென்னை மர மகசூல் மற்றும் புளியமர மகசூல் | 8159 | 8200 | 8200 |
| 10 | செலம்ப கவுண்டர் பூங்கா நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 223808 | 312000 | 327600 |
| 11 | உருளை சறுக்கு விளையாட்டு மைதான நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 35000 | 75600 | 79380 |
| 12. | நேரு பூங்கா, கமலாலய படகு சவாரி, மேற்கு புற காலியிடத்தில் இரு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் | 140000 | 190000 | 199500 |
| 13. | பேருந்து நிலையத்திற்குள் பெருந்தலைவர் பாதுகாப்பு அறை | – | 27600 | 28980 |

தனியார் நிர்வாகத்தில் இயங்கும் பொதுச்சந்தைகள் ஏதுமில்லை. பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கம் வசூல் ஆகிய இனங்கள் அனைத்தும் ஏலம் கோரி ஒருவரும் முன்வராததால், இந்நகராட்சி மூலம் சுங்கம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

அரை வருட தீர்வை விகிதம்

**<u>காலியிட வரி மற்றும் சொத்துவரி</u>**

| | | |
|---|---|---|
| **பொது காரியத்திற்காக** | **–** | **4.25 %** |
| **தண்ணீர் மற்றும் சாக்கடைக்காக** | **–** | **3.25 %** |
| **கல்வி வரி** | **–** | **2.50 %** |
| **நூலக வரி** | **–** | **0.75 %** |
| | மொத்தம் | **10.75 %** |

1. **<u>விவசாய நில வரி :</u>**

விவசாய நில வரி அரசு ஆணைப்படி ரத்து செய்யப்பட்டது.

2. **<u>தொழில் வரி :</u>**

தமிழ்நாடு அரசின் சட்டம் **24/1992** மற்றும் திருத்தம் சட்டம் **9/1994** மற்றும் திருத்தச் சட்டம் எண். **12/1995** ன்படி **01.10.2013** முதல் கீழ்கண்டவாறு அறிக்கையாண்டில் தொழில் வரி **2015–2016** முடிய வசூல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **124D** உட்பிரிவு **13(2)**இன்படி நகர்மன்றத்தால் ஒவ்வொரு **5** ஆண்டிற்கு ஒரு முறை தொழில்வரி **25%** முதல் **35%** முடிய திருத்தி நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதன் அடிப்படையில் நகர்மன்ற தீர்மானம் எண். **389**, நாள் **17.12.2013**இல் ஏற்கனவே உள்ள அரையாண்டு தொழில்வரியில் **01.10.2013** **25%** உயர்வு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட விவரப்படி தொழில்வரி **01.10.2013** முதல் உயர்வு செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண். | அரை வருட வருமானம் | அரை வருட தொழில் வரி |
|---|---|---|
| **1** | ரூ.**21000/–** வரை | இல்லை |
| **2** | ரூ.**21001** முதல் ரூ.**30000** வரை | ரூ. **125** |
| **3** | ரூ.**30001** முதல் ரூ.**45000** வரை | ரூ. **313** |
| **4** | ரூ.**45001** முதல் ரூ.**60000** வரை | ரூ. **625** |
| **5** | ரூ.**60001** முதல் ரூ.**75000** வரை | ரூ. **938** |
| **6** | ரூ.**75000** மற்றும் அதற்கு மேல் | ரூ. **1250** |

## 3. வரி வசூல் விபரம் :

| | | 2013–2014 | 2014–2015 | 2015–2016 |
|---|---|---|---|---|
| அ) | எல்லா வரியினத்திலும் கேட்புத் தொகை ஜனத்தொகையின் எண்ணிக்கையில் நபர் ஒன்றுக்கு வரி | 637.39 | 923.52 | 818.05 |
| ஆ) | சொத்துவரியில் கேட்புத்தொகை மொத்த கட்டடங்களின் எண்ணிக்கையில் ஒரு கட்டிடத்தின் மீது வரி | 935.11 | 1348.99 | 1001.49 |
| இ) | தொழில் வரியில் கேட்பு தொகை தொழில்வரி விதிக்கப்பட்ட மொத்தநபர்கள் எண்ணிக்கையில் நபர் ஒன்றுக்கு தொழில் வரி | 75.06 | 145.75 | 97.07 |

**சொத்து வரி முறையீடுகள் 2014–2015 முடிய சொத்து வரி மேல் முறையீடு**

| | |
|---|---|
| அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக உள்ளது | இல்லை |
| அறிக்கையாண்டில் பெறப்பட்டவை | – |
| அறிக்கையாண்டில் முடிவுற்றவை | – |
| நிலுவை | – |

**வழக்குகள் 2015–2016 முடிய**

| | |
|---|---|
| அறிக்கையாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக உள்ளது | 68 |
| அறிக்கையாண்டில் தொடரப்பட்டவை | 18 |
| மொத்தம் | **86** |
| அறிக்கையாண்டில் முடிவுற்றவை | 25 |
| நிலுவையில் உள்ளது | 61 |

நகராட்சிக்கு சம்பந்தப்பட்ட வழக்குகள் நகராட்சி சட்ட ஆலோசகர் திரு. கே.வி. தங்கவேலு, எம்.ஏ., பி.எல்., 01.04.2013 முதல் 17.02.2014 தேதி முடிய கவனித்து வந்துள்ளார்கள். அன்னார் 17.02.2014ஆம் தேதிய விண்ணப்பத்தில் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நகராட்சி சட்ட ஆலோசகர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். அதன்படி இவ்வலுவலக ந.க.எண். 1198/2014/சி1, நாள் 18.02.2014ஆம் தேதிய செயல்முறைகளில் 18.02.2014 முதல் நகராட்சி சட்ட ஆலோசகர் பணியிலிருந்து

விடுவிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் அரசு வழக்கறிஞர் மூலமும், திரு. கே.வி. தங்கவேலு, வழக்கறிஞர் மூலமும் நகராட்சி வழக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 5. கேட்பு வசூல் நிலுவை :

நடப்பு ஆண்டில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூலிக்கக் கூடிய இனங்களின் கேட்பு வசூல் நிலுவை கீழ் வருமாறு 2015–2016. ரூ. இலட்சத்தில்

| | | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| கேட்பு : | சொத்து வரி | 193.55 | 471.78 | 665.33 |
| | தொழில் வரி | 67.15 | 115.70 | 182.85 |
| | தண்ணீர் கட்டணம் | 13.17 | 195.90 | 209.07 |
| | வரியில்லா இனங்கள் | 17.52 | 134.10 | 151.62 |
| | மொத்தம் | 291.39 | 917.48 | 1208.87 |
| வசூல் | சொத்து வரி | 31.28 | 422.07 | 453.35 |
| | தொழில் வரி | 4.95 | 100.36 | 103.10 |
| | தண்ணீர் கட்டணம் | 1.85 | 193.76 | 195.61 |
| | வரியில்லா இனங்கள் | 0.47 | 134.10 | 134.57 |
| | மொத்தம் | 38.55 | 850.29 | 886.63 |
| நிலுவை | சொத்து வரி | 162.27 | 49.71 | **211.98** |
| | தொழில் வரி | 62.20 | 15.34 | **79.75** |
| | தண்ணீர் கட்டணம் | 11.34 | 2.14 | **13.45** |
| | வரியில்லா இனங்கள் | 17.05 | 0.00 | **17.05** |
| | மொத்தம் | 252.86 | 67.19 | **322.23** |

| | | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| **வசூல் சதவீதம்** | சொத்து வரி | 16.16 | 89.46 | 68.14 |
| | தொழில் வரி | 7.37 | 86.74 | 56.39 |
| | தண்ணீர் கட்டணம் | 14.05 | 98.91 | 93.56 |
| | வரியில்லா இனங்கள் | 2.68 | 100.00 | 88.75 |

## 6. இதர பயன்தரத்தக்க இனங்களின் வருமானம் கீழ்வருமாறு

அறிக்கையாண்டில் பாவலர் முத்துசாமி நகர் மன்ற கட்டிடம் வாடகைக்கு விடப்பட்ட வகையில் வருமானம் ரூ. 5,36,750/– ஆகும்.

## 7. பூங்காக்களும் தோட்டங்களும் :



நேரு பூங்கா மற்றும் சந்தைப்பேட்டைபுதூர் பூங்கா ஆகிய பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 8. அம்மா உணவகங்கள் :

அறிக்கையாண்டில் 25.05.2015 முதல் கீழ்க்கண்ட இரண்டு அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகிறது.

1. பூங்கா சாலை அம்மா உணவகம்
2. திருச்சி சாலை அம்மா உணவகம்

நகரில் வாழும் கூலி வேலை செய்பவர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு இவர்களின் பசியினை போக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததன்படி மேற்கண்ட இரண்டு உணவகங்களிலும் கீழ்க்கண்ட விவரப்படி குறைந்த விலை உணவகங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வ. எண். | உணவகம் பெயர் | இட்லி நாள் ஒன்றுக்கு | | சாம்பார் சாதம் நாள் ஒன்றுக்கு | | தயிர் சாதம் ஒன்றுக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விலை ரூ. | எண்ணிக்கை | விலை ரூ. | எண்ணிக்கை | விலை ரூ. | எண்ணிக்கை |
| 1. | பூங்கா சாலை அம்மா உணவகம் | 1/– | 1200 | 5/– | 300 | 3/– | 300 |
| 2. | திருச்சி சாலை அம்மா உணவகம் | 1/– | 1200 | 5/– | 300 | 3/– | 300 |

தேவையான அரிசி, தமிழ்நாடு வாணிப கழகம் மூலமும் பால் ஆவின் நிறுவனம் மூலமும், எரிவாயு சரண்யா ஏஜென்ஸி மூலமும், காய்கறிகள் மற்றும் மளிகை பொருட்கள் நாமக்கல்

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் கொள்முதல் செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் மேற்கண்ட அம்மா உணவகங்களில் மகளிர் குழுக்கள் மூலம் தலா 12 பெண்கள் மூலம் 24 பெண் (மகளிர் குழு) பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் காலை 4.00 மணி முதல் 11.00 மணி வரையிலும், காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரையிலும் தலா ஆறு பெண்கள் வீதம் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது.

அறிக்கையாண்டில் இரண்டு அம்மா உணவகங்களிலும் ரூ. 54,67,338/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அறிக்கையாண்டில் இரண்டு அம்மா உணவகங்களிலும் இட்லி, சாம்பார் சாதம், தயிர் சாதம் ஆகியவை ரூ. 21,17,507/–க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## நிதி நிலைமை

## வருவாய் மற்றும் மூலதன நிதி :

| **Expenditure :** | |
|---|---|
| **A/c. Head Description** | **Amount Rs.** |
| A. Personnel Cost (i) Salaries | 63850642 |
| A. Personnel Cost (ii) Others | 1814412 |
| B. Terinal Retirement Benefits | 23804902 |
| C. Operating Expenses | 49093309 |
| D. Repairs Maintenance | 15606575 |
| E. Programme Expenses | 3076921 |
| F. Administrative Expenses | 11211237 |
| G. Finance Expenses | 5476762 |
| **Total** | **173934760** |

| **Income :** | |
|---|---|
| A. Property Tax | 18652464 |
| B. Other Taxes | 11570440 |
| C. Assigned Revenue | 0 |
| D. Devolution Fund | 124494686 |
| E. Service Charges Fees | 6475786 |
| F. SJSRY | 0 |
| G. Sale Hire Charges | 2140802 |
| H. Other Income | 23566684 |
| **Total** | **186900862** |

**குடிநீர் நிதி :**

| **Expenditure :** | |
|---|---|
| **A/c. Head Description** | **Amount Rs.** |
| A. Personnel Cost (i) Salaries | 8657942 |
| B. Terminal and Retirement Benefits | 96109 |
| C. Operating Expenses | 40750878 |
| D. Repairs Maintenance | 25610503 |
| E. Programme Expenses | 137400 |
| F. Administrative Expenses | 89967 |
| G. Finance Expenses | 4463170 |
| **Total** | **79805969** |

| **Income :** | |
|---|---|
| A. Property Tax | 14263649 |
| E. Service Charges Fees | 32977011 |
| F. SJSRY | 5918702 |
| H. Other Income | 525270 |
| **Total** | **53684632** |

**கல்வி நிதி :**

| **Expenditure :** | |
|---|---|
| **A/c. Head Description** | **Amount Rs.** |
| C. Operating Expenses | 166500 |
| D. Repairs Maintenance | 1521705 |
| F. Administrative Expenses | 349875 |
| **Total** | **2038080** |

| **Income :** | |
|---|---|
| A. Property Tax | 10972038 |
| H. Other Income | 372900 |
| **Total** | **11344938** |

# <u>நகரமைப்பு</u>

## (2016–2017)

**நகரமைப்பு அய□வர்கள□ அறிக்கை ஆண்டில□ பணிபுரிந்தவர்கள□ விவரம் :**

| வ. எண். | அலுவலர்கள் பெயர் திருவாளர்கள் | பணிப் பொறுப்பு | காலம் |
|---|---|---|---|
| 1. | பா. ஜெயவேல் | நகரமைப்பு அலுவலர் | 01.04.2016 – 31.03.2017 |
| 2. | என். சீனிவாசன் | நகரமைப்பு ஆய்வாளர் 2 (பகுதி), 3, 4, 5 (பகுதி), 9, 10, 11, 12, 13, 14, 20, 21, 22, 23, 24, 25, 26, 28, 29, 30, 31, 32, 33, 34,35, 36, 37, 38, 39 | 01.04.2016 – 31.03.2017 |
| 3. | பி. செல்வன் | நகரமைப்பு ஆய்வாளர் 1, 2 (பகுதி), 5(பகுதி), 6, 7, 8, 15, 16, 17, 18, 19, 27 | 01.04.2016 – 31.03.2017 |



நாமக்கல் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக 14.12.1988 முதல் இயங்கி வந்தது. நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை அரசாணை எண். 22, நாள் 21.01.2011இல் அருகிலிருந்த ஒன்பது (9) ஊராட்சிகள் 1) தும்மங்குறிச்சி, 2) அய்யம்பாளையம், 3) நல்லிபாளையம், 4) முதலைப்பட்டி, 5) சின்ன முதலைப்பட்டி, 6) கொசவம்பட்டி, 7) கொண்டிசெட்டிபட்டி, 8) பெரியப்பட்டி, 9) காவேட்டிப்பட்டி நகராட்சியுடன் சேர்க்கப்பட்டதன் மூலம் இந்நகரின் எல்லை 55.24 சதுர கிலோ மீட்டராக விரிவடைந்தது. இப்பகுதிகளில் கட்டப்படும் கட்டுமானங்களுக்கும், மனைப்பிரிவுகளுக்கும், இயந்திர நிறுவனங்களுக்கும் மற்றும் ஏற்படும் நில உபயோக மாற்றங்களுக்கும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920இல் அத்தியாயம் 9 மற்றும் 10இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களின்படியும், நகர் ஊரமைப்பு சட்டம் 1971இல் கண்டுள்ள விதிமுறைகளையும் செயல்படுத்திட கீழ்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## <u>நகரமைப்புப் பிரிவு அலுவலர்கள் விபரம் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | நகரமைப்பு அலுவலர் (நிலை – 1) | – | – |
| 2. | நகரமைப்பு ஆய்வர் | – | 2 |
| 3. | சங்கிலியாளர்கள் | – | 2 |

## <u>பணிகள் :</u>

### <u>கட்டிட விண்ணப்பங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டின்ஆரம்பத்தில் நிலுவை | – | இல்லை |
| 2. | அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட மனுக்கள் | – | 156 |
| 3. | அறிக்கை ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டவை | – | 146 |
| 4. | அனுமதி மறுக்கப்பட்டவை | – | 10 |
| 5. | நிலுவை | – | இல்லை |
| 6. | அறிக்கை ஆண்டில் கட்டிட உரிமத் தொகையாக வசூல் செய்யப்பட்ட தொகை | – | ரூ. 10,61,965/– |

### <u>அறிக்கை ஆண்டில் அனுமதி பெறாத கட்டிடங்கள் விபரம் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை | – | இல்லை |
| 2. | அறிக்கை ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை | – | 140 |
| 3. | கட்டிட அனுமதி வழங்கப்பட்டவை | – | – |
| 4. | கட்டிட விண்ணப்பம் பெறப்பட்டது | – | – |

### <u>ஆக்கிரமிப்புகள் பற்றிய விபரம் :</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டில் நகராட்சி சாலைகள், பேருந்து நிலையம், நெடுஞ்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் செய்யப்பட்டுள்ள மொத்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | – | 573 Nos. |
| 2. | அறிக்கை ஆண்டில் நெடுஞ்சாலை துறையுடன் இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டவை | – | 573 Nos. |

## விளம்பர பலகைகள் பற்றிய விபரம் :

1. அறிக்கை ஆண்டில் நகராட்சி பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகைகள் கண்டறியப்பட்டவை – 421 Nos.
2. அறிக்கை ஆண்டில் அகற்றப்பட்டவை – 421 Nos.

நாமக்கல் நகராட்சி எல்லைக்குள் உள்ளூர் திட்டக் குழுவால் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் 1,2,3,4எ, 4பி, 5,6,7,8 மற்றும் 9 செயல்படுத்தி நகரை முறையாக வளர்ச்சியடைய தகுந்தவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

## விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 1

இந்த விரிவு அபிவிருத்தி திட்டம் பிரிவு 19 (1)–ன் படி விளம்பரப்படுத்தப்பட்டு வரைபடம் எண். 2 தயாரிக்கப்பட்டுள்ளது. இடச் சொந்தக்காரர்கள் கூட்டம் கூட்டப்பெற்று ஆலோசனைகள் பெறப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களுக்கு 24.06.1994–ல் இணக்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட திட்டம் நகராட்சி ஊரமைப்பு இயக்குனரால் இணக்கம் அளிக்கப்பட்டு விளம்பரப்படுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. தற்போது சென்னை நகர் ஊரமைப்பு இயக்குனர், அவர்களால் இணக்கமளிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு பிரிவு 29இன்கீழ் ஒப்புதல் பெற தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விஸ்தீரணம் 345.25 ஏக்கராகும். எல்லை விபரம் திருச்செங்கோடு ரோடுக்கு வடக்கு, சேலம் ரோட்டிற்கு மேற்கு.

## விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 2

இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 29–ன் படி நகர் ஊரமைப்பு இயக்குனரின் கடிதம் எண் : 14280/87–ம் நாள் 28.03.1989–ல் அங்கீகரிக்கப்பட்டு திட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள வளர்ச்சியை கருத்தில் கொண்டு மேற்படி திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் உத்திரவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எல்லை விபரம் திருச்செங்கோடு ரோடுக்கும் தெற்கு, பரமத்தி ரோட்டிற்கும் வடக்கு வி தீரணம் 109.55 ஹெக்டேர் (அ) 270.70 ஏக்கர்.

## விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 3

விரிவு அபிவிருத்தி திட்ட சட்டப்படி 15 (1)–ன் கீழ் விளம்பரப்படுத்தப்பட்ட வரைபடம் எண். 2 தயாரிக்கப்பட்டுள்ளது. இடச்சொந்தக்காரர்கள் கூட்டம் கூட்டப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்கள் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விரிவு அபிவிருத்தி திட்ட உத்தேசங்களை முழுமைத் திட்டத்தில் கண்டுள்ள உத்தேசங்களுக்கு ஏற்ப மாற்றி அமைக்கும்படி சென்னை நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில சொந்தங்காரர்கள் கூட்டம் 15.07.93–ம் தேதி நகராட்சி அலுவலகத்தில் கூட்டப்பட்டு ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் பெறப்பட்டு சென்னை நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் இணக்கம் பெற 02.09.93–ல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் முழுமைத் திட்ட மாற்றங்களுக்கு ஏற்ப திட்ட மாற்றங்கள் 24.01.96–ல் உள்ளூர் திட்டக்குழு அங்கீகரித்த பின் அரசிற்கு அனுப்பப்பட்டது. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண். 1251/2010 டிபி1, நாள் 03.07.2010இல், பிரிவு 29இன்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் விஸ்தீரணம் 245.17 ஏக்கராகும். எல்லை விபரம் பரமத்தி ரோட்டிற்கு தெற்கும் மோகனூர் ரோட்டிற்கு மேற்கும் ஆகும்.

## விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 4ஏ

நாமக்கல் உள்ளூர் திட்டப் பகுதிகள் நடக்கும் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 4எ ஆணை 1980 அறிவிப்பு செய்யப்பட்டதுடன் அதன் பரப்பளவு அதிகமாக உள்ளதால் இடத்தை அளவைப் பணி செய்வதற்கும், வரைபடங்கள் தயாரிப்பதற்கும் ஏதுவாக விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 4–ஐ இரண்டாக பிரித்து அதற்கு விரிவு அபிவிருத்தி திட்டம் எண்: 4எ மற்றும் 4பி என நகராட்சி ஊரமைப்பு துணை இயக்குனரின் 4224/92 செ.மீ.4 நாள் 17.12.92 கடிதப்படி பிரிக்கப்பட்டு மாவட்ட அரசிதழில் விளம்பரப்படுத்தப்பட்டது. 4எ விரிவு அபிவிருத்தி திட்டம் அடங்கும் நில உரிமையாளர்கள் கூட்டம் 02.06.94–ல் கூட்டப்பட்டு ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெறப்பட்டு இவ்வலுவலக 27.06.94 ந.க.எண். 7874/92 தேதிய கடிதத்தில்

நகர் ஊரமைப்பு இயக்குனரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. 1971–ம் வருட நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 25–ன் கீழ் இணக்கம் வேண்டி உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் அளித்து மற்றும் சாலை சான்றிதழ், வழக்குகள் தொடர்பாக சான்றிதழ் அனுப்பப்பட்டது. சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 25–ன் கீழ் 01.06.2001–ம் தேதிய ந.க.எண். 9560/2000/டி2–ஆம் எண்ணிட்ட செயலாணையில் இத்திட்டத்திற்கு இணக்கம் அளிக்கப்பட்டு பின்னர் ந.க.எண். 28107/2003/டிபி1, நாள் 17.06.2008இல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 73.30.25 ஹெக்டர் எல்லை விபரம் சேந்தமங்கலம் சாலையிலிருந்து துறையூர் சாலை முடிய உள்ள பகுதிகள் ஆகும்.

## <u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 4பி :</u>

இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குனரின் 21.01.1998–ம் தேதிய ந.க.எண் : 43349/97/டிபி2 கடிதத்தில் இணக்கம் பெறப்பட்டுள்ளது. நாமக்கல் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண் : 6, நாள் 30.11.99–ல் இறுதி ஒப்புதல் பெற நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநர் செயல்முறை ஆணை ந.க.எண். 17862/2004/டிபி1, நாள் 20.03.2007இல் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 05.03.2008 அன்று தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. பரப்பளவு தோராயமாக 87.92.37 ஹெக்டர் எல்லை விபரம் துறையூர் சாலையிலிருந்து மோகனூர் சாலையில் உள்ள பகுதிகள் ஆகும்.

## <u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 5</u>

விரிவு அபிவிருத்தி திட்டம் சட்டம் பிரிவு 19 (1)–ன் கீழ் விளம்பரப்படுத்தப்பட்ட வரைபடம் எண் : 2 தயாரிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இடச்சொந்தக்காரர்கள் கூட்டம் கூட்டப் பெற்றது. நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வரப்பெற்ற ஆட்சேபணைகள் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானத்துடன் நகர் ஊரமைப்பு இயக்குனரின் இணக்கத்திற்கு 15.06.90–ம் தேதி அனுப்பப்பட்டது. திருத்திய வரைபடம் 5/91–ஐ ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளூர் திட்டக்குழுமம் எண் : 5, நாள் : 31.03.93–ல் அனுமதிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்களுக்கு இணக்கம் அளித்து உத்திரவிட 01.04.93–ல் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 25இன்கீழ் நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களால் செயல்முறை கடிதம் ந.க.எண்.

15547/2007/டிப1, நாள் 06.06.2008இல் இணக்கம் அளிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது இறுதி ஒப்புதல் கோரி உள்ளூர் திட்டக் குழு ஒப்புதலுடன் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வழியாக நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் ந.க.எண் 4238/76/ஜி1, நாள் 01.07.2009இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விஸ்தீரணம் 304.01 ஏக்கராகும். எல்லை விபரம் சேலம் ரோட்டிற்கு கிழக்கும் சேந்தமங்கலம் ரோட்டிற்கு வடக்கும் ஆகும்.

## <u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 6</u>

நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 18–ன் படி மே மாதம் 1980–ல் விரிவு அபிவிருத்தி திட்டம் 6 அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. திட்டத்திற்கு விதி எண் : 4–ன் படி வரைபடம் எண் :2 தயாரிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடம் எண் : 2–ல் உள்ளூர் திட்டக்குழு பரிசீலனைக்கு வைக்கப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் 28.08.1989–ல் நடைபெற்றது. உரிமையாளர்கள் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு வைக்கப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்கள் இணக்கத்திற்கு 13.02.1992–ல் அனுப்பப்பட்டது. தற்போது அரசாணை எண்: 5 (வி.வ) துறை, நாள் : 03.01.2000–ன் படி மறு ஆய்வு முழுமைத்திட்ட நில உபயோக அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டு இணக்கம் கோரி நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பரப்பு 208.47 ஏக்கராகும், எல்லை விபரம் சேந்தமங்கலம் ரோட்டிற்கு வடக்கும் திட்டம் 5–க்கு கிழக்கும் ஆகும்.

## <u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 7</u>

நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் படி விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பரப்பு 181.89 ஏக்கர் ஆகும். இதற்கு வரைபடம் எண் : 2 தயாரிக்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்கள் கூட்டம் 23.09.1992–ம் தேதி கூட்டப்பட்டு ஆட்சேபணைகள் பெறப்பட்டு சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், அவர்களுக்கு அனுப்பப்பட்டு இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குனரால் 05.05.1994–ல் இணக்கம் செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டு நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களது இறுதி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எல்லை விபரம் கோட்டை பகுதி சேந்தமங்கலம் சாலை தென்புறம், வெள்ளவாரி, மேட்டுத் தெரு மற்றும் தில்லைபுரம் மெயின் ரோடு வடபுறம் அகும்.

## <u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 8</u>

நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவு 19–ன் படி மே மாதம் 1980–ல் விரிவு அபிவிருத்தி திட்டம் 8 அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு விதி எண். 4–ன் படி வரைபடம் எண். 2 தயாரிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நில உரிமையாளர்கள் ஆலோசனை கூட்டம் 29.08.89–ம் தேதி நடைபெற்றது. நில உரிமையாளர்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் உள்ளூர் திட்டக் குழுமத்தில் வைக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குனருக்கு 11.04.1990–ல் அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குனரால் 30.05.1994–ல் இணக்கம் அளிக்கப்பெற்று விளம்பரப்படுத்தப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இறுதி ஒப்புதலுக்கு உள்ளூர் திட்டக் குழும தீர்மானத்துடன் நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையாளருக்கு சேலம், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 30.05.1994–ல் இணக்கம் அளிக்கப்பட்ட இத்திட்டத்தின் விஸ்தீரணம் 143.88 ஏக்கராகும். எல்லை விபரம் திட்டம் 1–க்கு வடக்கும் திட்டம் 9–க்கு தெற்கும் ஆகும்.

## <u>விரிவு அபிவிருத்தி திட்டம் எண் : 9</u>

நகர் ஊரமைப்பு சட்டம் 9–ன்படி மே மாதம் 1980–ல் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.9 அறிவிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு விதி எண். 4–ன் படி நகர் ஊரமைப்பு துணை இயக்குனரால் வரைபடம் எண். 2 தயாரித்து வைக்கப்பட்டு நில உரிமையாளர்கள் கூட்டம் 30.08.89–ம் தேதி நடைபெற்றது. நில உரிமையாளர்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளைப் பெற்று உள்ளூர் திட்டக் குழுமத்தில் வைக்கப்பட்டு நகர் ஊரமைப்பு துறையினருக்கு 11.04.1990–ல் அனுப்பப்பட்டு, 16.05.1994–ல் இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குனரால் இணக்கம் அளிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டும் நடவடிக்கையில் உள்ளது. இறுதி ஒப்புதல் பெற உள்ளூர் திட்டக் குழும தீர்மானத்துடன் சென்னை நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வி தீரணம் 168.15 ஏக்கராகும். எல்லை விபரம் சேலம் ரோடுக்கும் மேற்கு, நகராட்சி எல்லைக்கும் தெற்கு, கிழக்கு திட்டம் எண். 8க்கும் வடக்கு.

## முழுமைத் திட்டம் ( MASTER PLAN ) :

நாமக்கல் முழுமைத் திட்டம் அரசினரால் 1983–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. தற்போதைய நில உபயோகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை கருத்தில் கொண்டு சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குனரை கலந்து ஆலோசித்து திருத்திய முழுமைத் திட்டம் அரசின் அனுமதிக்கு சமர்ப்பிக்குமாறு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்: 419, நாள் : 10.6.1993–ல் அரசு உத்திரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் உதவியுடன் புதியதாக தற்போதைய நில உபயோகங்களை அளவை செய்து திருத்திய முழுமைத் திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32 உட்பிரிவு ( 2 ) உட்கூறு ( பி )–ன் படி திருத்திய முழுமைத் திட்டத்தின் அரசின் இணக்கத்திற்கு அனுப்பி வைக்க 27.02.1995–ம் தேதிய 8–ம் எண்ணிட்ட திட்டக்குழு தீர்மானத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வலுவலகம் 27.02.1995–ம் தேதிய கடிதம் மூலம் மறு ஆய்வு முழுமைத் திட்டம் (REVIEW MASTER PLAN) அரசின் இணக்கத்திற்கு சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் வழியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு அரசு ஆணை எண் : 727 நாள் : 31.08.1995–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு தற்போது நாமக்கல் நகர எல்லைக்குள் இருப்புப்பாதை மற்றும் ரயில் நிலையம் அமைய உள்ளதால் மீண்டும் திருத்திய முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரிவு 28–ன் கீழ் அரசின் இறுதி ஒப்புதலுக்காக 25.03.1999 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த முழுமைத் திட்டம் அரசாணை எண். 5 வீ.வ. ( ம ) ந.வ. துறை, நாள் 03.01.2000–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## நகரளவை பிரிவு :

இந்நகராட்சி பஞ்சாயத்தாக இருந்த காலத்தில் தெரு சர்வே செய்யப்பட்டு பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு நகராட்சி அலுவலகத்தில் உள்ளது. நகர நில அளவை செய்ய ரூ. 1,85,840.19 நிர்ணயம் செய்யப்பட்டு தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டது. நில அளவுகள் முடிக்கப்பட்டு இறுதியாக்கப்பட்ட பணிகளை சர்வே துறையினரால் நில அளவை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சேபணைகள், ஆலோசனைகள் பெற்று நகர நில அளவை வரைபடங்கள், அடங்கல் பதிவேடுகள் பெறப்பட்டுள்ளது. ஒரு நகரளவர், இரண்டு களப்பணியாளர்கள் அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார்கள். அப்பணியிடங்களும் நிரந்தரமாக்க உத்திரவு பிறப்பிக்க அரசைக் கேட்டுக் கொள்ள நகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# <u>பொது சுகாதாரம்</u>

**பொது சுகாதாரப் பிரிவில் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்தவர்கள் விவரம் :**

| வ. எண். | அலுவலர்கள் பெயர் திருவாளர்கள் | பிரிவு | பணிப் பொறுப்பு | காலம் |
|---|---|---|---|---|
| 1. | சண்முகவேல் | துப்புரவு அலுவலர் | | 01.04.2016 – 06.03.2017 |
| 2. | பாலமுருகன | துப்புரவு அலுவலர் | | 07.03.2017 – 31.03.2017 |
| 3. | க. பேச்சிமுத்து | து.ஆ. | 3வது & மலேரியா, 10, 7, 8, பிறப்பு மற்றும் இறப்பு | 01.04.2016 – 06.03.2017 |
| 4. | எஸ். உதயகுமார் | து.ஆ. | 1, 2வது பிரிவு (கூ.பொ.) (old records) 4, 9வது பிரிவு பிறப்பு மற்றம் இறப்பு சான்றிதழ் | 01.04.2016 – 27.09.2016 |
| | | | 1 மற்றும் 2வது பிரிவு மட்டும் | 28.09.2016 – 31.03.2017 |
| 5. | பொ. ரமணசரண் | | 4, 9 Old birth | 28.09.2016 – 31.03.2017 |
| 6. | கா. செல்வராஜ் | து.ஆ. | 2வது பிரிவு ABC பணிகள் | 22.03.2017 – 31.03.2017 |
| 7. | ஆர். துரைசாமி | ஓட்டுநர் | TN 88 4395 (Compactor) | 01.04.2016 – 31.03.2017 |
| 8. | பி. முருகேசன் | ஓட்டுநர் | TN 88 0420 (Tipper Lorry) | 01.04.2016 – 31.03.2017 |
| | | | TN 28f 1986 (Sullage) | |
| | | | TN 28 AM 8511 (Dumper Placer) | |
| 9. | எஸ். ரவி | ஓட்டுநர் | TN 28 AC 9815 (Vikram Auto) | 01.04.2016 – 31.03.2017 |
| | | | TN 88 5230 (Auto) | |
| | | | TN 28 AA 7985 (Tipper Lorry) | |
| 10. | எஸ். ரவிச்சந்திரன் | ஓட்டுநர் | TN 28 AC 9734 (Auto) | 01.04.2016 – 31.03.2017 |
| | | | TN 88 2395 (Dumper Placer) | |
| 11. | வீ. சீரங்கன் | ஓட்டுநர் | TN 28 AP 2237 (Compactor) | 01.04.2016 – 31.03.2017 |
| 12. | செந்தில்குமார் | | TN 28 AA 7916 (Tipper Lorry) | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓட்டுநர் | TN 28 0391 (JCB Robot) | 01.04.2016 – 31.03.2017 |



நகரில் அரசினர் தலைமை மருத்துவமனை ஒன்று நோயாளிகளை இரவும், பகலும் கவனிக்க தேர்ந்த மருத்துவர்களுடன், விலை உயர்ந்த மருந்துகள் மற்றும் கருவிகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது அரசினர் மருத்துவமனையில் நகர மக்களின் தேவையை உத்தேசித்து அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. அரசினர் மருத்துவமனை நல்ல முறையில் இயங்கி வருவது நகர மக்களுக்கு நல்ல வசதியாகும். இதை தவிர நகரில் 69 தனியார் மருத்துவமனை இயங்கி வருகிறது. அறிக்கை ஆண்டில் நகராட்சியில் மருத்துவமனை ஏதும் பராமரிக்கப்படவில்லை. நகரத்தில் மருத்துவ வசதி போதுமானதாக உள்ளது. மருத்துவ கழிவுகள் தனியார் மூலம் முறையாக (Ramkey) குரூப் கம்பெனி மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

## <u>பிறப்பு விகிதமும், மகப்பேறு நிவாரணமும்</u>



**2016–17ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த பிறப்புகள் 4893 ஆகும். 2015–16ஆம் ஆண்டில் 5715. 2009–ம் ஆண்டில் இடைக்கால மக்கள் தொகை பிறப்பு விகிதம் இடைக்கால ஆண்டு மக்கள் தொகையின்படி கணக்கிட்டதன்படி 9.4 சதவிகிதமாகும்.**

இது சென்ற ஆண்டில் 9.4 சதவிகிதமாகும். பதிவான ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு 15 ஆகும். இது சென்ற ஆண்டில் 28 ஆகும். இதன்படி இளம் குழந்தைகளின் இறப்பு விகிதம் உயிரோடு பிறந்ததில் 1000–க்கு 2.6 சதவிகிதமாகும். இது சென்ற ஆண்டில் 1000–க்கு 4.8% ஆகும். அறிக்கையாண்டில் இறந்து பிறந்த குழந்தைகள் எண்ணிக்கை 35. இது சென்ற ஆண்டில் 1 ஆகும். சிசு நலம் பேணுதல் விடுதியோ அல்லது சுகாதார நல அபிவிருத்தி சங்கமோ இந்நகரில் ஏதுமில்லை. நகராட்சியில் நலமுறைப் பணியாளர்கள் ஒருவருமில்லை.

இந்நகராட்சியால் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டு மற்றும் ஒரு தாய்சேய் நல விடுதி பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தகுதி பெற்ற நகராட்சி நகர

சுகாதார செவிலியர்களால் தாய்சேய்நலம் மற்றும் தடுப்பூசி பணிகள் கவனிக்கப்பட்டது. நகரில் இயங்கி வரும் அரசு மருத்துவமனை ஒன்றிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் பணிபுரியும் தகுதி பெற்ற நகர சுகாதார செவிலியர்களால் 5048 மகப்பேறுகள் பார்க்கப்பட்டுள்ளது. நகர எல்லைக்குள் மகப்பேறு பார்க்க வரும் பெண்களுக்கு நகராட்சி நகர சுகாதார செவிலியரால் அவ்வப்போது தக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. நகர சுகாதார செவிலியர்களால் பிரசவமுன் மற்றும் பின் கவனிப்புகள் ANC, PNC Visit செய்யப்படுகிறது.

அறிக்கையாண்டில் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தாய்சேய் நல விடுதியில் 2 நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் ஒரு ஆயாவும் பணியாற்றினர்.

## 2. <u>குடும்ப நலத்திட்டம் :</u>



அறிக்கையாண்டில் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறுவை சிகிச்சைக்கு இலக்கு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. நகராட்சி பகுதியில் உள்ள தாய்மார்களை குடும்ப நல திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் 130 நபர்கள் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

## 4. <u>இறப்பு விகிதம், கொள்ளை நோய்களும் ஊறிப்போன நோய்களும் :</u>

அ ) அறிக்கையாண்டில் பதிவான இறப்பு 562 ஆகும். இது சென்ற ஆண்டில் 840 ஆகும். இறப்பு விகிதம் 1000–க்கு 5.50 % ஆகும். சென்ற ஆண்டில் 1000ல் 15.27 % ஆகும். நோய்கள் மூலம் இறந்தவரின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நோய்களின் பெயர்கள் | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| 1 | காலரா | – | – | – |
| 2 | அம்மை | – | – | – |
| 3 | பிளேக் | – | – | – |
| 4 | காய்ச்சல் | 12 | – | – |
| 5 | மலேரியா | – | – | – |
| 6 | சீதப்பேணி | – | – | – |
| 7 | நிற மூச்சுப்பை நோய்கள் | – | – | – |
| 8 | நிற காரணங்கள் | 608 | 646 | 696 |
| 9 | டெங்கு | 27 | 0 | – |
| | மொத்தம் | 647 | 646 | 696 |

பிறப்பு இறப்பு பதிவு செய்யும் வேலைகள் 2 துப்புரவு ஆய்வாளர்களால் கவனிக்கப்படுகிறது.

**ஆ) காலரா ( வாந்திபேதி ) :**

அறிக்கையாண்டில் நகர எல்லைக்குள் காலரா நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ஒருவருமில்லை.

**இ) பெரு அம்மை ( வைசூரி ) :**

அறிக்கையாண்டில் பெரு அம்மை நோயினால் எவரும் பாதிக்கப்படவில்லை. அறிக்கையாண்டில் முதல் அம்மை குத்தல், மறு அம்மை குத்தல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**ஈ) பிளேக் நோய் :**

அறிக்கையாண்டில் பிளேக் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் ஒருவருமில்லை.

**உ) மலேரியா :**

அறிக்கையாண்டில் மலேரிய நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இல்லை. சென்ற ஆண்டும் இல்லை. இத்திட்டத்தின் கீழ் எட்டு மருந்து தெளிக்கும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஒரு களப்பணி உதவியாளர் பணியிடம் 11.09.2008 முதல் பணியில் உள்ளார். அறிக்கை ஆண்டில் தொடர்ந்து நீர்த்தேக்கங்களிலும், கொசு முட்டையிடும் இடங்களில் சக்தி வாய்ந்த கொசு தடுப்பு மருத்துகள் தெளிக்கப்பட்டது. இந்த தலைப்பின் கீழ் செலவு ரூ. 37,19,458/– ஆகும். இது சென்ற ஆண்டில் ரூ. 15,74,828/– ஆக இருந்தது. நகரில் புகை தெளிப்பான் மூலம் “பைரத்ரம் எக்ஸ்ட்ராக்ட்” என்ற புகை மருந்து இரவில் அடிக்கப்பட்டு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்நகராட்சியில் சிறப்பு அம்சமாக கம்பூசியா என்னும் மீன் வளர்க்கப்பட்டு சுமார் 1750 கிணறுகளில் கம்பூசியா மீன் விடப்பட்டு கண்காணித்து வரப்படுகிறது. இந்த கம்பூசியா மீன்கள் ADES என்னும் வகை கொசுகள் விடும் முட்டை, லார்வா பருவத்தில் உள்ளவைகளை உணவாக எடுத்துக் கொள்கின்றது. இந்த மீன் பல இடங்களில் விடுவதனால் அனாபிலிபஸ் என்னும் கொசு வகையின் வளர்ச்சி

குறைவாக உள்ளது. இது ஒரு பையாலஜிக்கல் முறையில் கொசுவின் உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது.

## <u>சிக்குன் குன்யா :</u>

எவரும் பாதிக்கப்படவில்லை.

## <u>தேசிய முத்தடுப்பு ஊசி திட்டம் ( National immunisation Programme):</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சி தாய் சேய்நல விடுதியில் முத்தடுப்பு ஊசி போடும் திட்டத்தில் கீழ்கண்டவாறு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

முத்தடுப்பு ஊசி வழங்கப்பட்ட விபரம் :

## <u>தேசிய முத்தடுப்பு ஊசி திட்டம் (National immunisation Programme) :</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சி தாய் சேய்நல விடுதியில் முத்தடுப்பு ஊசி போடும் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | போலியோ சொட்டு மருந்து | 0 டோஸ் | 714 |
| | | 1 டோஸ் | 714 |
| | | 2 டோஸ் | 710 |
| | | 3 டோஸ் | 709 |
| | | பூஸ்டர் டோஸ் | 709 |
| 2 | டி.பி.டி தடுப்பூசி | 1 டோஸ் | 714 |
| | | 2 டோஸ் | 710 |
| | | 3 டோஸ் | 709 |
| | | பூஸ்டர் டோஸ் | 709 |
| 3 | தட்டம்மை தடுப்பூசி | | 709 |
| 4 | பி.சி.ஜி தடுப்பூசி | | 714 |
| 5 | டி.டி.தடுப்பூசி | 1 டோஸ் | 564 |
| | | 2 டோஸ் | 564 |
| | | பூஸ்டர் டோஸ் | 232 |
| 6 | இரும்பு சத்து மாத்திரை (11–9 வயதுக்குட்பட்ட பெண்கள்) | (மாதந்தோறும்) | 4250 |
| 7 | இரும்பு சத்து மாத்திரை (கர்ப்பிணி பெண்கள்) | 1 டோஸ் | 796 |
| | | 2 டோஸ் | 796 |
| | | 3 டோஸ் | 796 |

## தேசிய பல்ஸ் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் :

அறிக்கையாண்டில் நகராட்சி பகுதியில் உள்ள 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ வராமல் தடுப்பதற்கு 02.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய தேதிகளில் 21 மையங்களில் கீழ்க்கண்டவாறு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

| | 02.04.2017 | 30.04.2017 |
|---|---|---|
| சொட்டு மருந்து வழங்கும் மொத்த மையங்கள் | 22 | 22 |
| மையங்களில் சொட்டு மருந்து பெற்ற குழந்தைகள் எண்ணிக்கை | 48.5 | 4792 |
| வீடு வீடாக சென்று பரிசோதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 15114 | 15114 |
| வீடு வீடாக சென்று சொட்டு மருந்து வழங்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | 610 | 585 |
| இடம் பெயர்பவர்களுக்கு வழங்கப்பட்டது | 1066 | 1113 |
| மொத்தம் சொட்டு மருந்து வழங்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | 6481 | 6490 |

## 5. துப்புரவு :

அ) நகராட்சி பேருந்து நிலையத்தில் 05.11.1970–ம் தேதி முதல் நவீன கட்டண கழிப்பிடம் திறக்கப்பட்டு பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கட்டண கழிப்பிடம் நகராட்சியால் பொது ஏலத்தில் விடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் அறிக்கையாண்டில் வருவாய் ரூ. 20,20,893/–. இது சென்ற ஆண்டில் ரூ. 20,38,809/– ஆகும். சிறுநீர் அறைகள் பேருந்து நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் உள்ள கழிப்பிடங்களை தண்ணீர் வசதியுடன் கூடிய நவீன கழிப்பிடங்களாக அமைக்கப்பட்டுள்ளது.

## பொது கழிப்பிடங்கள் :

1. நல்லிபாளையம்
2. பெரியூர்

3. அய்யம்பாளையம்
4. காவேட்டிபட்டி
5. போதுபட்டி
6. பெரியபட்டி
7. வெள்ளவாரி மேல தெரு
8. ஏ.எஸ். பேட்டை
9. காமராஜர் நகர்
10. கோட்டை காலனி
11. பாவடி தெரு
12. சேந்தமங்கலம் ரோடு
13. குப்பண்ணன் தெரு
14. சாவடி தெரு
15. செல்லாண்டியம்மன் கோவில் தெரு
16. நடராஜபுரம் 4வது தெரு
17. அர்த்தனாரி பள்ளி தெரு
18. ஆர்.பி.புதூர் காலனி
19. எம்.ஜி.ஆர். காலனி
20. பஜார் தெரு (மலையடிவாரம் அருகில்)
21. பேருந்து நிலையம்
22. வெலிங்டன் தெரு
23. ஆர்.பி.புதூர் குட்டை தெரு
24. பேட்டை காலனி
25. கொசவம்பட்டி தேவேந்திரன் தெரு
26. கொசவம்பட்டி தேவேந்திரன் தெரு
27. கொசவம்பட்டி காமராஜர் நகர்
28. சின்னமுதலைபட்டி ரேஷன் கடை அருகில்.

**<u>அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் :</u>**

துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் அவ்வப்பொழுது நடைபெறும் கடைகளை பார்வையிட்டு உரிமையாணை நிபந்தனைகளை கண்டிப்பான முறையில் அமுல் செய்து வந்தனர். அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமையாணை வழங்குவதன் மூலம் கட்டணமாக அறிக்கை ஆண்டில் வரப்பெற்ற உரிமையாணைத் தொகை ரூ. 1,27,050/– ஆகும். சென்ற ஆண்டில் ரூ. 5,06,515/– ஆகும்.

# <u>திடக்கழிவு மேலாண்மை</u>

# குப்பையில்லா நகரம் : zero (Garbage Town )

நாமக்கல் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் விதிகள் 2000இன்படி அனைத்து வீடுகளிலும் தினந்தோறும் மக்கும் குப்பை தனியாகவும், மக்காத குப்பை தனியாகவும் பிரித்து இந்நகராட்சியின் துப்புரவு பணியாளர்களால் சேகரிக்கப்பட்டு "குப்பையில்லா நகரமாக" தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவரவர் வீடுகளிலேயே மக்கும் குப்பை தனியாகவும், மக்காத குப்பை தனியாகவும் பிரித்து வழங்கப்பட்டு வருவதால் தெருக்களில் குப்பை இல்லாத சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. நகரின் முக்கிய வீதிகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்களால் தெரு கூட்டப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்படுகிறது. மேலும், பணி தலத்திலேயே மறு சுழற்சிக்கான பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம், முக்கிய பாதைகள் மற்றும் தெருக்களில் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் இரவு நேர துப்புரவு பணி செய்கிறார்கள். விடுமுறை நாட்களிலும் துப்புரவு பணி மேற்கொள்ளப்படுகிறது.

உயர்நீதி மன்ற உத்திரவையும் மற்றும் 2000–ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை வழி முறைகளையும் அமுல்படுத்திய முதல் நகரம் நாமக்கல் ஆகும். மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களை பெறாமல் நகராட்சி நிதியினை கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2000–த்தை நாட்டிலேயே முதன் முறையாக அமுல்படுத்தி முதல் நகரம் என்று உச்ச நீதி மன்றம் பாராட்டினை பெற்றது. இந்நகராட்சி ஈகோ சிட்டி என்று எண்ணும் அளவில் தூய்மையாக உள்ளது என நன்கு ஆராய்ந்து சென்ற 30.12.2005 தேதியன்று இந்நகரம் ஈகோ சிட்டி என சான்று ஆசியன் புரொடெக்டிவ் ஆர்கனைசேஷன், டோக்கியோ மற்றும் நேஷனல் புரொடெக்டிவ் கவுன்சில், நியூடெல்லி இணைந்து சான்று அளித்து நாமக்கல் நகராட்சி ஒரு ஈகோ சிட்டி என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மாநிலத்திலேயும் இந்திய அளவிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை நன்கு திறம்பட செயல்படுத்தியதாகவும் இந்நகரின் மக்கள் மனதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை அறிந்ததற்காகவும் குப்பைகளை வெளியில் கொட்டக்கூடாது என்ற ஓர் எண்ணத்தை மாற்றியதற்கும் நகராட்சியின் இதர பணிகள் நல்லமுறையில் செயல்பட்டதற்காகவும் பல காரணிகளை கண்டறிந்து அதனை கலைந்து

செயல்படுத்தியமைக்காக உலக தர சான்று ISO 14001 : 2004 என்ற தர சான்று 27.03.2006–ம் தேதியன்று இரண்டு முறை கடுமையான தணிக்கைக்கு பின் வழங்கப்பட்டது. மேலும் ISO 14001 : 2004 தரச்சான்று 15.01.2013 மீண்டும் வழங்கப்பட்டது. இச்சான்று 04.01.2016 முடிய அனுமதிக்கப்பட்டதாகும். தேசிய அளவில் முதல் முறையாக ISO 14001 : 2004 என்ற தரச்சான்று பெற்ற பெருமை இந்நகராட்சியை சாரும்.

மேலும், நாமக்கல் நகராட்சியானது ISO தர சான்றிதழ் பெற்று வரலாற்று சிறப்புமிக்க நகரமாக விளங்கி வருவதால், மேற்படி நிலையினை தொடர்ந்து பராமரிக்க நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 199 பேர் ஆர்வமுடன் ஈடுபட்டு பணி செய்து வருகின்றனர்.

**<u>மண்புழு உரம் தயாரித்தல் :</u>**

இந்நகராட்சியில் மண்புழு மற்றும் இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. தினந்தோறும் தினசரி மார்க்கெட், உழவர் சந்தை, ஆஞ்சநேயர் கோவில் மற்றும் சிற்றுண்டி பேருண்டி கடைகளிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகளை Processing Unit-இல் அரைத்து, Windrow பிளாம்பார்மில் உரிய முறையில் மக்கவைத்து பின்னர் சிமெண்டு தொட்டிகளில் மண்புழு மூலம் உரம் தயாரிக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் 8 டன் இயற்கை உரமும், 3 டன் மண்புழு உரமும் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தால் மண்புழு உரம் கிலோ ரூ. 7/– மற்றும் இயற்கை உரம் கிலோ ரூ.5/– என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி KVK நிறுவனத்தால் பரிந்துரை செய்யப்படும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒரு நாளைக்கு 46 டன் குப்பை சேகரிக்கப்பட்டு 30 டன் மக்கும் உரத் தயாரிப்பதற்கும், 4 டன் மறு சுழற்சிக்கு பயன்படும் குப்பைகளாகவும், 12 டன் எதற்கும் பயன்படாத குப்பையாகவும் பிரிக்கப்படுகிறது. மறு சுழற்சிக்குப் பயன்படும் கழிவுகளை ஒரு கிலோ ரூ. 4/– வீதம் விற்பனை செய்யப்படுகிறது. எதற்கும் பயன்படுத்த தகுதியற்ற குப்பைகளை சுகாதார முறைப்படி அழிப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு மாசு கட்டுப்பாட்டு வாரிய ஒப்புதல் பெற்று Scientific Land filling முறையாக செயல்பட்டு வருகிறது.

## 2015–2016
## தணிக்கை தடைகள் நிலுவை விவரம்

| வ.எண் | ஆண்டு | நிலுவை எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 1993–1994 | 8 |
| 2. | 2000–2001 | 4 |
| 3. | 2001–2002 | 14 |
| 4. | 2002–2003 | 4 |
| 5. | 2003–2004 | 5 |
| 6. | 2004–2005 | 3 |
| 7. | 2005–2006 | 2 |
| 8. | 2006–2007 | 4 |
| 9. | 2007–2008 | 4 |
| 10. | 2008–2009 | 13 |
| 11. | 2009–2010 | 10 |
| 12. | 2010–2011 | 9 |
| 13. | 2011–2012 | 8 |
| 14. | 2012–2013 | 7 |
| 15. | 2013–2014 | 84 |
| | **மொத்தம்** | **179** |

| வ. எண் | தணிக்கை | | கூட்டமர்வுகளின் எண்ணிக்கை | நீக்கம் செய்யப்பட்டவை |
|---|---|---|---|---|
| 1. | தணிக்கை கூட்டமர்வுகள் | – | 5 | 1003 |
| 2. | உயர்மட்டக் குழு | – | 4 | 818 |
| 3. | மாநில உயர்மட்டக் குழு | – | 1 | 4 |
| **மொத்தம்** | | | **10** | **1825** |

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 2016–2017 :



அறிக்கையாண்டில் பள்ளி மதிய உணவு திட்டம் இந்நகராட்சியில் ஒரு நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலும், மூன்று நகராட்சி துவக்கப்பள்ளி, ஒரு நகராட்சி நடுநிலைப்பள்ளியிலும் மற்றும் 6 அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3 துவக்கப்பள்ளிகள், 2 நடுநிலைப்பள்ளிகள், 1 உயர்நிலைப்பள்ளியிலும் பராமரிக்கப்பட்டது. இதனால் பயன் அடைந்த குழந்தைகள் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | முதல் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை | 683 குழந்தைகள் நாள் ஒன்றுக்கு |
| 2. | 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை | 447 குழந்தைகள் நாள் ஒன்றுக்கு |
| 3. | 9ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை | 27 குழந்தைகள் நாள் ஒன்றுக்கு |

நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு வழங்கப்பட்ட உணவுகளின் அளவு பின்வருமாறு :

| | அரிசி | பருப்பு | எண்ணெய் | உணவீட்டு செலவினம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பருப்பு தினம் | பருப்பில்லாத தினம் |
| 5 வயது முதுல் 9 வயது வரை | 1.30 | 0.015 | 0.003 | 130 பைசா | 170 பைசா |
| 10வயது முதல் 15 வயது வரை (6–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை) | 1.40 | 0.015 | 0.003 | 140 பைசா | 180 பைசா |

முதல்வரால் புதிய 13 வகை கலவை சாதம் 28.09.2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**13 வகையான கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான முட்டை மசாலாக்கள் விவரம்**

| வ. எண் | கிழமை | வகைகள் | முதல் வாரம் | 2வது வாரம் | 3வது வாரம் | 4வது வாரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | **திங்கள்** | சாதம் வகை | காய்கறி பிரியாணி | சாம்பார் சாதம் | காய்கறி பிரியாணி | சாம்பார் சாதம் |
| | | முட்டை வகை | மிளகுத் தூள் முட்டை | வெங்காயம், தக்காளி முட்டை மசாலா | மிளகுத் தூள் முட்டை | வெங்காயம், தக்காளி முட்டை மசாலா |
| 2. | **செவ்வாய்** | சாதம் வகை | கொண்டைக் கடலை புலவு | மீல்மேக்கர் காய்கறி கலவை சாதம் | கொண்டைக் கடலை புலவு | மீல்மேக்கர் காய்கறி கலவை சாதம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | முட்டை வகை | தக்காளி முட்டை மசாலா | மிளகுத் தூள் முட்டை | தக்காளி முட்டை மசாலா | மிளகுத் தூள் முட்டை |
| 3. | **புதன்** | சாதம் வகை | தக்காளி சாதம் | புளியோ தரை | தக்காளி சாதம் | புளியோதரை |
| | | முட்டை வகை | மிளகுத் தூள் முட்டை | தக்காளி முட்டை மசாலா | மிளகுத் தூள் முட்டை | தக்காளி முட்டை மசாலா |
| 4. | **வியாழன்** | சாதம் வகை | சாதம், சாம்பார் | எலுமிச்சை சாதம், சுண்டல் | சாதம், சாம்பார் | எலுமிச்சை சாதம், சுண்டல் |
| | | முட்டை வகை | வேக வைத்த முட்டை | தக்காளி முட்டை மசாலா | வேக வைத்த முட்டை | தக்காளி முட்டை மசாலா |
| 5 | **வெள்ளி** | சாதம் வகை | கருவேப்பிலை / கீரை சாதம் உருளைக் கிழங்கு பொரியல் | சாதம், சாம்பார், உருளைக் கிழங்கு பொரியல் | கருவேப்பிலை / கீரை சாதம் உருளைக் கிழங்கு பொரியல் | சாதம், சாம்பார், உருளைக் கிழங்கு பொரியல் |
| | | முட்டை வகை | முட்டை மசாலா | வேகை வைத்த முட்டை | முட்டை மசாலா | வேக வைத்த முட்டை |

வாரத்தில் திங்கட் கிழமை முதல் வெள்ளி கிழமை வரை முட்டை, ஒரு முட்டையின் எடை 46 கிராம், 12 முட்டைகளின் எடை 525 கிராம். வெள்ளிக் கிழமைதோறும் உருளைக்கிழங்குக்கு ஒரு குழந்தைக்கு 40 பைசா வீதம் மான்யம் வழங்கப்படுகிறது. பாசிபயிறு மற்றும் கொண்டைக்கடலையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 3 துவக்கப்பள்ளி சத்துணவு மையங்களும், 1 நடுநிலைப்பள்ளி, 1 உயர்நிலைப்பள்ளி சத்துணவு மையமும் இயங்கி வந்தது. 3 அமைப்பாளர்கள், 4 சமையலர்கள் மற்றும் 1 உதவியாளர் பணியாற்றி வருகிறார்கள்.

அரசு நிதி உதவி பெறும் துவக்கப்பள்ளி சத்துணவு மையங்கள் 3 துவக்கப்பள்ளி, 2 நடுநிலைப்பள்ளி மற்றும் 1 உயர்நிலை பள்ளி ஆகிய 6 மையங்கள் நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. 6 அமைப்பாளர்கள், 4 சமையலர்கள் மற்றும் 3 உதவியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இம்மையங்களில் பணிபுரியும் சத்துணவு பணியாளர்களுக்கு ஊதியம் மாவட்ட கருவூலம் மூலம் வழங்கப்படுகிறது. உணவூட்டு செலவினங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்

நிர்வாகத்தில் செயல்படுவதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலம் 11 பள்ளி சத்துணவு மையங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இத்தலைப்பின்கீழ் அறிக்கையாண்டில் 5 & 9 மற்றும் 10 & 14 வயது வரம்பு குழந்தைகள் பள்ளி சத்துணவு மையங்களுக்கு ரூ. 3,64,456/–ம் மான்யமாக பெறப்பட்டுள்ளது. இப்பொருள் சம்பந்தமாக அலுவலக வேலைகளை கவனிக்க ஒரு உதவியாளர் உடன் கணக்கர் பணியாற்றி வந்தனர். மாதாந்திர கணக்கு இதற்கென நியமிக்கப்பட்டுள்ள தணிக்கை ஆய்வாளர்களால் சரிபார்க்கப்பட்டு வருகிறது. தணிக்கை ஆட்சேபனைகள் நடவடிக்கை எடுத்து அவ்வப்போது நேர் செய்யப்பட்டு வருகிறது. சத்துணவு பணியாளர்களுக்கு ஜுன் 2012 முதல் அரசு ஆணை எண். 38, சமூக நலம் மற்றும் சத்துணவ திட்டம் நாள் 23.04.2012இன்படி அரசு கருவூலத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது.

11 சத்துணவு மையங்களுக்கும் 2014–15ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் அடுப்பு மேடைகள் அமைத்து இரட்டை அடுப்புடன் கூடிய எரிவாயு உருளைகள் வழங்கப்பட்டு சமைக்கப்பட்டு வருகிறது.

## கொடி நாள் 2016–2017

| குறியீடு | சாதனை |
|---|---|
| ரூ. 2.60 இலட்சம் | ரூ. 2.60 இலட்சம் (100 % வசூலிக்கப்பட்டது) |

நகராட்சியில் சிறப்பாக பணிபுரிந்தவர்களை கௌரவிக்கும் வகையில், சுதந்திர தின விழாவில் (15.08.2016) நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாவட்ட ஆட்சியரகத்தில் கீழ்கண்டவர்களுக்கு நற்சான்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.

1. திரு. செ. பிரசாத், இளநிலை உதவியாளர்
2. திரு. மு. கணேசன், துப்புரவு பணி மேற்பார்வையாளர்

நகராட்சியில் சிறப்பாக பணிபுரிந்தவர்களை கௌரவிக்கும் வகையில், குடியரசு தின விழாவில் (26.01.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாவட்ட ஆட்சியரகத்தில் கீழ்கண்டவர்களுக்கு நற்சான்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நாள் :

(ஒம்.) கு. பாலசுப்ரமணியன்,
ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி,